


"இனியென்ன் நெஞ்சுக்குத்து, ஆஸ்பத்திரி எண்டு அடுத்த நாடகம் தொடங்கிடும் கண்டியளோ"

Registered as a Newspaper | பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 69

சனிக்கிழமை
03 பெப்ரவரி 2024

## மருந்துக்கொள்வனவில் மோசடி

# கெஹலிய கைது!



கொழும்பு, பெப்ரவரி 3

**தரமற்ற மருந்துகளைக் கொள்வனவு செய்தமை தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல 10 மணிநேர விசாரணையின் பின்னர் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.**

11

## நடிகர் விஜய்க்கு நாமல் வாழ்த்து

கொழும்பு, பெப். 3
நடிகர் விஜயின் அரசியல் பிரவேசத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.
நடிகர் விஜய் 'தமிழக வெற்றிக் கழகம்' என்ற அரசியல் கட்சி

11

## ரியூசன்களின் விதிமீறல்; காதுகொடுக்காத டக்ளஸ்

யாழ்ப்பாணம், பெப். 3
தனியார் கல்வி நிறுவனங்கள் வெள்ளிக்கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் செயற்படவேண்டிய விதம் தொடர்பில் யாழ். மாவட்டச் செயலரால் விடுக்கப்பட்ட உத்தரவு உதாசீனப்படுத்தப்படுவதாக ஒருங்

11

## திங்கட்கிழமை விடுமுறையில்லை

கொழும்பு, பெப். 3
76ஆவது சுதந்திரதினம் நாளை ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டாலும், அதற்கு மறுநாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்படமாட்டாது. எனவே திங்கட்கிழமை அனைத்து அரச நிறுவனங்களும் வழமை போன்று இயங்கும் என பொது நிர்வாக அமைச்சின் செயலர் பிரதீப் யசரத்ன நேற்றுத் தெரிவித்தார். (அ-ஒ-இ)

## ஐஸுடன் இளைஞன் கைது

முல்லைத்தீவு, பெப். 3
21 கிராம் உயிர்கொல்லி ஐஸ் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்ததாக விசுவமடுவைச் சேர்ந்த 21 வயதான இளைஞன் ஒருவன் புதுக்குடியிருப்பில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளான். (அ-ஒ-19)

## களவாடப்பட்ட
## 23 லட்சம் ரூபா நகை, பணம் 24 மணித்தியாலத்துள் மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 3
யாழ்ப்பாண நகரில் ஆட்களற்ற வீட்டில் திருடப்பட்ட 23 இலட்சம் ரூபா பெறுமதியான நகை மற்றும் பணம் என்பவற்றை முறைப்பாடு கிடைத்த 24 மணித்தியாலத்துக்குள் பொலிஸார் மீட்டுள்ளனர்.
யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவு பதில் பொறுப்பதிகாரி இந்திக்க தலைமையிலான குழுவினரே, இவ்வாறு துரித நடவடிக்கை எடுத்து, கொட்டடியைச் சேர்ந்த 24 வயது சந்தேகநபரைக் கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்து நகை மற்றும் பணத்தையும் மீட்டுள்ளனர். (அ-ஒ-26-125)

## 14 கிலோ கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 3
யாழ். மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவால் 14 கிலோ கஞ்சா யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்று மீட்கப்பட்டுள்ளது . இதுதொடர்பில் மானிப்பாயைச் சேர்ந்த 43 வயதான சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ஒ-26)

## மூடப்பட்ட கடவையூடாக
## வீதியைக் கடந்தவர் ரயில் மோதிச் சாவு



கிளிநொச்சி, பெப். 3
ரயில் கடவை மூடப்பட்டிருந்த நிலையில், வீதியைக் கடக்க முற்பட்ட ஒருவர் ரயில் மோதுண்டதில் உயிரிழந்துள்ளார். இவர் 5 பிள்ளைகளின் தந்தையாவார்.
கிளிநொச்சி டிப்போ வீதியில் ரயில் நிலையத்துக்கு

11

## யாழ். மாவட்டத்துக்கு 332 மில்லியன் ரூபா

யாழ்ப்பாணம், பெப். 3
யாழ். மாவட்டத்தில் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்

11

## தரம் 6 அனுமதிக்கான வெட்டுப்புள்ளி வெளியீடு

கொழும்பு, பெப். 3
2023ஆம் ஆண்டுக்கான தரம் 6க்கு பாடசாலைகளில் மாணவர்களை உள்ளீர்ப்பதற்கான வெட்டுப்புள்ளிகள் புலமைப்பரிசில் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு கல்வி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளன.

11

## குடிவரவு – குடியகல்வு காரியாலயம் முற்றுகை

வவுனியா, பெப். 3
குடிவரவு - குடியகல்வுத் திணைக்கள வவுனியா பிராந்தியக் காரியாலத்தின் பிரதான வாயிலை பொதுமக்கள் நேற்று முற்றுகையிட்டமையால் பதற்றம் ஏற்பட்டது.
கடவுச்சீட்டைப்பெற்றுக்கொள்ள நேற்றுமுன்தினம் இரவு முதல் நூற்றுக்கணக்கான மக்கள் காத்திருந்தனர். வரிசை இலக்கம் பொலிஸாரால் வழங்கப்பட்டு, பெயர்களும் பதிவு செய்யப்பட்டன.

11

## 'ஹைஏஸ்' சில்லுக் கழன்று சொரூபத்துடன் மோதியது

பளை, பெப். 3
ஹைஏஸ் வாகனத்தின் பின் சில்லு கழன்றதில் தடம் புரண்டு வீதியின் மறுபக்கம் இருந்த மாதா சொரூபத்துடன் மோதியது.

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்தரங்குகளைத் தவிர்த்து செயலில் இறங்குங்கள்

## வடக்கு ஆளுநர் அறிவுரை



**யாழ்ப்பாணம், பெப். 3**
**எதிர்வரும் காலங்களில் பயிற்சிக் கருத்தரங்குகளைத் தவிர்த்து, இதுவரை வழங்கப்பட்ட பயிற்சிகளைக் கொண்டு செயற்றிட்டங்களை உடன் நடைமுறைப்படுத்துங்கள் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் துறைசார் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.**

வடக்கு மாகாணத்தில் செயற்படும் உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், வடக்கு மாகாணத்திலுள்ள அமைச்சுக்களின் செயலாளர்கள் ஆகியோருடனான சந்திப்பு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இதன்போது வடக்கு மாகாணத்தில் இதுவரை வழங்கப்பட்ட பயிற்சி செயற்றிட்டங்களினூடாக முதலீடுகளில்வருமானத்தைஈட்டிக்கொள்ளும் வழிமுறைகளைதிட்டமிடல்வேண்டும். பாடசாலை இடைவிலகளைத் தடுப்பதற்கான நடவடிக்கையாக 'மீண்டும் பாடசாலைக்குச் செல்லல்' திட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள்.

பின்தங்கிய பிரதேசசபைகளுக்கு வருமானங்களைப் பெற்றுக்கொள்ளும் செயற்றிட்டங்களை முன்மொழியுங்கள். விவசாய உற்பத்திகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துவதோடு, புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கு ஊக்கப்படுத்துங்கள். இந்த முன்மொழிவுகளை ஒரு மாதத்துக்குள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு ஆளுநர் பணித்தார். (ச-26)



# பாலம் அமைக்க வெட்டிய குழிகளினால் தட்டுத்தடுமாறும் மக்கள்

கிளிநொச்சி, பெப். 3
கிளிநொச்சி கோணாவில் – யூனியன்குளம் இணைப்பு வீதியில் பாலம் அமைப்பதற்கு குழிகள் வெட்டப்பட்ட நிலையில் பணிகள் நிறைவுபெறாததால் போக்குவரத்தில் சிரமங்களை எதிர்நோக்க நேரிடுகிறது என்று அந்தப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

கரைச்சிப் பிரதேசசபையால் இந்தப் பால வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. வீதியின் இடைநடுவே பெரிய குழிகள் வெட்டப்பட்டன. ஆயினும் பணிகள் நிறைவுறுத்தப்படாமல் கைவிடப்பட்டுள்ளன.

இதனால் உயிராபத்தின் மத்தியிலேயே இந்த வீதியூடாகப் பயணிக்க வேண்டியுள்ளது. வேலைகளை விரைவாக நிறைவு செய்யாத பிரதேசசபை எதற்காக குழிகளை வீதியில் அமைக்கின்றது? எனவே பாலம் அமைக்காவிடினும் வீதியைத் தற்காலிகமாகப் புனரமைத்துத் தர கரைச்சிப் பிரதேசசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-13)

# கடம்பேசுவரனின் நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப். 3
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் பண்டிதர்ம.ந.கடம்பேசுவரனின் மூன்று நூல்களின் வெளியீட்டு நிகழ்வு இன்று சனிக்கிழமை பி.ப.3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ப-159)



# வனவளத்திணைக்கள பிடியிலுள்ள காணியை விடுவித்துத் தாருங்கள்

## மன்னார் இசைமாலைத்தாழ்வு மக்கள் போராட்டம்

மன்னார், பெப். 3
நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 46 ஏக்கர் காணியை விடுவித்து காணியற்றோருக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று வலியுறுத்தி மன்னார் இசைமாலைத் தாழ்வு கிராம மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நானாட்டானில் கடந்த புதன்கிழமை இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

"இசைமாலைத்தாழ்வு கிராமத்துக்குட்பட்ட 113 குடும்பங்கள் குடியிருப்பதற்கு காணியின்றி பல்வேறு அசௌரியங்களுக்கு முகங்கொடுக்கின்றன. ஒரு வீட்டில் இரண்டுக்கும் மேற்பட்ட குடும்பங்களாக வசித்து வருகின்றோம். எனவே மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதனைக் கவனத்திற் கொண்டு வனவளத் திணைக்களத்தின் பிடியிலுள்ள காணியை, எம்மைப் போன்ற காணியற்றோருக்குப் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" - என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ச-56)

# பிரிட்டன் தூதுவருடன் சிறீதரன் எம்.பி.சந்திப்பு

யாழ்ப்பாணம், பெப். 3
இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் அண்ட்ரியூ பற்றிக்கை நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன்.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொழும்பிலுள்ள தூதுவரின் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன் போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டமைக்கு சிறீதரனுக்கு



வாழ்த்துத் தெரிவித்த தூதுவர், அவரது அடுத்தகட்ட செயல்நோக்குகள் குறித்து கேட்டறிந்தார். ஈழத்தமிழர்களின் அரசியல் களத்தில் தாம் கொண்டிருக்கும் கரிசனையையும் வெளிப்படுத்தினார். (ச-125.100.66)

# எம்மோடுதான் தயா ரத்நாயக்க!

## ஐ.ம.சக்தி தெரிவிப்பு

கொழும்பு, பெப். 3
தமது கட்சியுடன் இணைந்த முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்னாயக்க, ஜனதா கட்சியுடன் இணைந்துள்ளார் என வெளியான தகவல்களை நிராகரித்துள்ளது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி.

"பழைய புகைப்படமொன்றை வைத்து போலியான முறையில் தகவல் பரப்பட்டுள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் தயா ரத்னாயக்க கடந்த 29 ஆம் திகதி ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தார். அவருக்கு சிரேஷ்ட ஆலோசகர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

போலிப்பரப்புரைகளால் எமது கட்சியைப் பலவீனமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன" என்றும் ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்தது. (ச- 44)

# மருத்துவமனையிலிருந்து சந்தேகநபர் தப்பியோட்டம்

வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் சிறைச்சாலை அதிகாரிகளின் காவலில் இருந்த சந்தேகநபர் கடந்த 31ஆம் திகதி காலை தப்பியோடியுள்ளமை தொடர்பில் பொலிஸார் தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

கஞ்சா விற்பனை மற்றும் வைத்திருந்தமை குற்றச்சாட்டில் கடந்த 26ஆம் திகதி நெளுக்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 28 வயதுடைய இளைஞன் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பின்னர் வவுனியா சிறைச்சாலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். இந்தநிலையில் 29ஆம் திகதி சிறைச்சாலையில் சந்தேகநபரான இளைஞருக்கு ஏற்பட்ட சுகவீனம் காரணமாக வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் சிறைச்சாலை அதிகாரிகளின் காவலில் சேர்க்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-18)

# ரணில் வீட்டுக்குத் தீ; சந்தேகநபர் கைது

கொழும்பு, ஜன. 3
2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற 'அரகலய' போராட்டத்தின்போது தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வீட்டுக்குத்தீவைத்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொட்டதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய ஒருவரே கைதுசெய்யப்பட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரதினம் கரிநாள்:

# பல்கலை மாணவர்களின் பேரணியைப் பலப்படுத்துக

தமிழரசுக் கட்சித் தலைவர் சிறீதரன் அழைப்பு

**கிளிநொச்சி, பெப். 3**

**இலங்கையின் சுதந்திரதினமான பெப்ரவரி மாதம் 4ஆம் திகதியை கரிநாளாக அறிவித்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் கிளிநொச்சியில் பேரணியும் போராட்டமும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிலையில், அதனைப் பலப்படுத்துமாறு தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில்:-

தமது பூர்வீக மண்ணில் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டுவரும் தமிழ்த்தேசிய இனத்தின் இருப்பை நிலைநிறுத்த, அரசுக்கும் அரச கட்டமைப்புகளுக்கும் எதிராக எல்லாவழிகளிலும் போராடவேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ள எமது மக்களது அக உணர்வுகளின் பிரதிபலிப்பாகவும், எமது மக்களின் குரலாகவுமே யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் இந்த எதிர்ப்புப் போராட்டம் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் அபிலாஷைகள் நிறைவேற்றப்படாதவரை, ஈழத்தமிழர்களை இறைமையுள்ள தேசிய இனமாக இலங்கைத் தேசம் அங்கீகரிக்காதவரை, இந்த நாட்டின் சுதந்திரதினம் தமிழ் மக்களின் கரிநாளே என்பதை மீள வலியுறுத்தும் இந்தப் போராட்டத்தில், கட்சி மற்றும் கொள்கை வேறுபாடுகள் எவையுமற்று எமது இனத்தின் உரிமைக்கான ஏகோபித்த குரலாக எல்லோரும் இணைந்து, இந்தப் போராட்டத்தை மக்கள் திரட்சி மிக்க போராட்ட வடிவமாக எழுச்சிபெறச் செய்யவேண்டும் -என்றுள்ளது. (ம-125)

## விசேட டெங்கு ஒழிப்பு; 369 இடங்கள் தரிசிப்பு



யாழ்ப்பாணம், பெப். 3

யாழ்.நகரப் பகுதியில் இடம்பெற்ற மூன்று நாள் விசேட டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் போது ஆயிரத்து 369 இடங்கள் சோதனைக் குட்படுத்தப்பட்டன என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது சுகாதாரமின்றிக் காணப்பட்ட வர்த்தக நிலையங்கள், குடியிருப்புகள் பலவற்றுக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டது. (ச-17)

## பாண் எடை நிர்ணயம்

பாணின் நிர்ணயிக்கப்பட்ட எடையை குறிப்பிட்டு வர்த்தமானி அறிவிப்பை நுகர்வோர் விவகார அதிகார சபை வெளியிட்டுள்ளது.

அதன்படி, ஒரு இறாத்தல் 450 கிராமாகவும் அரை இறாத்தல் பாண் 225 கிராமாகவும் இருக்க வேண்டும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. (ச-இ)

## யாழ்.நகரில் புகையூட்டல்

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ். நகரில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் நுளம்புகளை விரட்ட புகையடிக்கும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுவருகின்றன என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

கொழும்புத்துறை ஜே/62 பிரிவிலும் குருநகரில் ஜே/74, ஜே/75 பிரிவுகளிலும் நேற்றுமுன்தினம் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (ச-17)



பெலியத்த படுகொலை

## மகள், தந்தை கைதாகினர்!

பெலியத்த பகுதியில் ஐவர் படுகொலையின் பிரதான சூத்திரதாரிகளில் ஒருவராகக்கருதப்படும் 39வயதுப்பெண்ணொருவரும், அவரின் தந்தையும் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப்பெண்ணின் கணவரே பிரதான துப்பாக்கிதாரியாகச் செயற்பட்டுள்ளார் எனவும், அவர் தற்போது டுபாய்க்கு தப்பியோடியுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

சம்பவம் தொடர்பில் இதுவரை 8 பேர் கைதாகியிருந்த நிலையில், தற்போது மேலும் இருவர் வெயாங்கொட பகுதியில் வைத்தே சிக்கியுள்ளனர். (ம-44)



## இந்தியத் தூதுவரை சந்தித்தார் சந்திரிகா

கொழும்பு, பெப். 3

இலங்கைக்கான இந்தியாவின் புதிய தூதுவர் சந்தோஷ் ஜாவை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளில் அண்மையில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடினர். (ம-இ)

## பட்சி தினம் தெரியுமோ?

**ப**லநாள் கள்ளன் ஒருநாள் பிடிபடுவானாம். ஆனால் சிலர் நசுக்கிடாமல் செய்யிற கள்ள வேலையளைப் பிடிக்கிறதே பெரும்பாடு. அதுவும் அவையள் கொஞ்சம் அதிகாரமுள்ள ஆக்களா இருந்தா இன்னும் கஷ்டம். ஆனாலும் எவ்வளவு காலம் தான் ஏமாத்திப் பிழைக்க முடியும்? எல்லாம் மலிஞ்சால் சந்தைக்கு வந்துதானே ஆகோணும். அப்பிடிச் சந்தைக்கு வந்த ஒரு விசயத்தை இண்டைக்குச் சொல்லத்தான் வேணும்.

இப்பஎங்கபார்த்தாலும்ஒரேடெங்குதான்.மழை ஓய்ஞ்சும் டெங்கு ஓயிறபாடாக் காணேலை. இந்த முறை டெங்கு வந்து சாகிற ஆக்களும் கூடவா இருக்கு. அதால எல்லாரும் தாங்களே தங்களைக் காத்துக்கொள்ளுற வேலையளில இறங்கிட்டினம். டெங்கு நுளம்புக்கு கூடப் பிடிச்ச இடம் யாழ்ப்பாணரவுண் தான். இஞ்சதானே கழிவு தண்ணி ஓடுற வாய்க்கால்கள் றோட்டு முழுக்க இருக்கு. அப்பிடி வாய்க்காலுக்குள் பதுங்கி இருந்துட்டு, பிறகு வீடுகளுக்க ஆக்களை மொய்ச்சுக்கடிச்சாத்தான் உந்த நுளம்புகளுக்கு பத்தியப்படும். இப்பிடி நுளம்பிட்ட கடிவாங்கி, டெங்கெண்டு சொல்லி, ஆஸ்பத்திரி வார்ட்டில இருக்கிறதை விட, வருமுன் காக்கிறது தான் நல்லது எண்டு ரவுண்காரர் நினைக்கினம். அதால எப்பிடியாவது முனிசிபல்காரரைப் பிடிச்சு, ஓசியில நுளம்புக்கு புகை அடிச்சு அதுகளைக் கலைக்கிறதுக்கு ஆலாய்ப்பறக்கினம். இவையின்ர கெட்ட காலத்துக்கு புகைமருந்துக்கு கடும்தட்டுப்பாடு. அதால எல்லா இடத்துக்கும் முனிசிபல்காரராலையும் இலவசமா அடிக்கேலாது தானே. எங்கையெல்லாம் டெங்கு வருத்தக்காரர் இருக்கினமோ அவையின்ர வீடுவளவைச் சுத்தித்தான் புகையடிக்கினம்.

அப்பிடி புகையடிக்கப்போன ஒரு பி.எச்.ஐ.யிட்ட பக்கத்து வீடுகளில இருக்கிறவை, 'எங்கட வீட்டுக்கும் ஒருக்கா புகை அடிச்சு விடுங்கோவன்'எண்டு கேட்டிருக்கினம். அதுக்கு அந்த பி.எச்.ஐ.யும் 'தாராளமா அடிக்கலாம், முனிசிபலுக்குத் தெரியாமல் தான் அடிக்கோணும். அதுக்கு பத்தாயிரம் ரூபா முடியும்' எண்டு வலுகலாதியாச் சொல்லியிருக்கிறார். பத்தாயிரத்துக்கு ஓமெண்டுற வீடுகளுக்கு அவரும், புகையடிக்கிறவருமாச் சேர்ந்து காசை வாங்கிக் கொண்டு, புகையும் அடிச்சுக் கொண்டு வந்திருக்கினம். சிலவேளையளில, எங்க டெங்குக்காரர் இருக்கினமோ அங்க அடிக்காமல் காசு வாங்கின வீட்டுக்காரருக்கு மட்டும் புகையடிச்சுப் போட்டு வந்த கதையும் இருக்காம். ஆனால் இதையெல்லாம் ஆரோசிலர் உரிய இடத்துக்கு போட்டுக்குடுக்க, இப்ப அந்தப் பி.எச். ஐ.யிட்ட இருந்து புகையடிக்கிற பொறுப்பைப் பிடுங்கிப் போட்டினமாம். அதோட ஆளுக்கு விசாரணையும் நடந்து, சமாளிச்சு விட்டிட்டினமாம். நுளம்புதான் ஒரு பக்கத்தால ரத்தத்தைக் குடிக்குது எண்டு பார்த்தால், நுளம்பைச் சாட்டி இப்பிடியான ஆக்களுமெல்லோ சனத்தின்ர ரத்தத்தைக் குடிக்க வெளிக்கிடுகினம் பாருங்கோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு ட்ரோன்; அமெரிக்கா தீர்மானம்!

**வொஷிங்டன், பெப். 3**

**ஆயுதங்களைத் தாங்கிச் செல்லும் ஆளில்லாத் தாக்குதல் விமானங்களை இந்தியாவுக்கு விற்பனை செய்வதற்கு அமெரிக்கா உடன்பட்டுள்ளது.**

இந்தியாவுக்கு ட்ரோன்களை வழங்கும் அமெரிக்காவின் தீர்மானம் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

காலிஸ்தான் பிரிவினைவாதத் தலைவரான குர்பத்வந்சிங்கைக் கொலை செய்யத் திட்டம்தீட்டிய வழக்கில் இந்தியா முறையான விசாரணைகளை மேற்கொள்ளவில்லை என்று குறிப்பிட்டே இந்தியாவுடனான இந்த இராணுவ ஒப்பந்தம் அமெரிக்காவால் நிறுத்தப்பட்டிருந்தது.

இதற்கு இந்தியா அதிருப்தியைத் தெரிவித்தையடுத்து, இந்தத் தீர்மானம் குறித்து அமெரிக்க காங்கிரஸுக்கு அறிவித்து ஒப்பந்தத்தைத் தொடர்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அமெரிக்கப் பாதுகாப்பு ஒத்துழைப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த உடன்படிக்கையின் அடிப்படையில், சுமார் 4 பில்லியன் டொலர் பெறுமதியான ஆளில்லா விமானங்கள் அமெரிக்காவால் இந்தியாவுக்கு வழங்கப்படவுள்ளன. (ம)

# மரண அறிவித்தல்



தோற்றம்
28 . 05 . 1948

மறைவு
02 . 02 . 2024

## பாலசுப்பிரமணியம் கோசலாதேவி

செட்டிச்சோலை அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் கோசலாதேவி அவர்கள் நேற்று (02.02.2024) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் செல்லப்பா நாகம்மா தம்பதிகளின் கடைசிப் புதல்வியும், காலஞ்சென்ற சரவணமுத்து அன்னம்மா தம்பதிகளின் மூத்த மருமகளும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், சுபாஜினி, ஜங்கரன் (ஜேர்மனி), மயூரதன் (சுவிட்சர்லாந்து) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பூமா (ஜேர்மனி), திருஷி (சுவிட்சர்லாந்து) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கிருஷாந்த் (கொலண்ட்), அஜினா, ஆரமி, அஜன் (ஜேர்மனி), வியா (சுவிட்சர்லாந்து) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான ராசம்மா, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவமலர், பாலச்சந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.02.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி வடக்கு கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**077 058 8638**

(CS 28034) S-1

**தகவல்:**
**மகள் சுபாஜினி**

# ஐஸ் குளியல் கின்னஸ் சாதனை



பனிக்கட்டிகளால் நிரப்பப்பட்ட பெட்டிக்குள் 3 மணிநேரம் 6 நிமிடம் 45 நொடிகள் நின்று போலந்து நாட்டைச் சேர்ந்த பெண்ணொருவர் கின்னஸ் சாதனை படைத்தார். கட்டர்ஜினா ஜகுபவ்ஸ்கா என்ற 43 வயதுடைய பெண்ணே இந்தச் சாதனையை நிகழ்த்தினார். (ச)

## இராணுவத்தை நவீனமாக்க பிலிப்பைன்ஸ் நடவடிக்கை!

மணிலா, பெப். 3

தென்சீனக் கடற்பரப்பில் பதற்றம் அதிகரித்துவரும் நிலையில், தனது கடற்படையை நவீனப்படுத்தும் நடவடிக்கைகளை பிலிப்பைன்ஸ் ஆரம்பித்துள்ளது.

பிலிப்பைன்ஸ் நாட்டுக்கான முதலாவது நீர்மூழ்கிக் கப்பலைக் கொள்வனவு செய்வதற்கான ஒப்புதலை அந்த நாட்டு ஜனாதிபதி பேர்டினாண்ட் மார்கோஸ் வழங்கியுள்ளார்.

தென்சீனக் கடற்பரப்பில் சீனா மற்றும் தாய்வான் இடையிலான மோதல் போக்கையடுத்து நாளுக்குநாள் பதற்றம் அதிகரித்து வருகின்றது. அத்துடன் தென்சீனக் கடற்பரப்பில் ஒரு குறிப்பிட்ட பகுதியை பிலிப்பைன்ஸ் சொந்தம் கொண்டாடிவரும் நிலையில் அதற்கு சீனா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இதனால் சீனாவுக்கும் பிலிப்பைன்ஸுக்கும் இடையிலும் மோதல்போக்கு நிலவுகின்றது. ஆனால், சீனக் கடற்படைக்கு நிகரான கடற்படைப்பலமோ அல்லது இராணுவப் பலமோ பிலிப்பைன்ஸிடம் இல்லை. ஆதலால் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள பதற்றத்தைச் சமாளிப்பதற்காக தனது கடற்படையையும் இராணுவத்தையும் நவீனப்படுத்த பிலிப்பைன்ஸ் தீர்மானித்துள்ளது. (ம)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள் வழியில் செலவுகள் ஏற்படலாம். உறவினர்கள் வழியில் வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. உங்கள் யோசனையை குடும்பத்தினர் ஏற்றுக்கொள்வார்கள்.

**இடபம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். குடும்பத்தில் பெரி யவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். நன்மைகள் அதிகரிக்கச் செய்யும். மற்றவர்களைப் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**மிதுனம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வீண் விவாதம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கடகம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளிக்கத் தேவையான பணம் கிடைத்துவிடும். உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்காகச் செலவு செய்யவேண்டி வரும்.

**சிம்மம்:** வரவும் – செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். சிலருக்கு எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடி இருக்கும்.

**கன்னி:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். வியாபாரம் வ[illegible] இருக்கும். தேவையான பணம் கிடை[illegible]

**துலாம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக்கூடும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். மனஅமைதி ஏற்படும்.

**விருச்சிகம்:** உறவுகளால் நன்மை ஏற்படும். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். உடல்நலனில் கவனம் தேவை. வியாபாரத்தில் விற்பனை எதிர்பார்த்தபடி இருக்கும்.

**தனுசு:** உற்சாகமான நாள். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி ஏற்படும்.

**மகரம்:** புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். பிள்ளைகளால் செலவுகள் ஏற்பட்டாலும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைக்கக்கூடும். உணவு விடயத்தில் கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதால், செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தாயின் விருப்பத்தை பூர்த்தி செய்வீர்கள். பிணக்குகள் நீங்கும். எதிர்பாராத செலவுகள் அதிகரிப்பதால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பயணத்தின் இலக்கு எது?

மக்களின் இன்னல்களைக் கேட்டறிந்து அவற்றை நிவர்த்திக்கும் விதத்தில் முன்மாதிரியான திட்டமொன்றை ஆரம்பித்துள்ளார் வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ். இதன்படி பிரதிநிதித்துவ அரசியல் அல்லது பிரதிநிதித்துவ அதிகாரம் செய்யாமல் கிராமங்கள் தோறும் நேரில் பயணப்பட்டு, மக்களைச் சந்தித்து அவர்களுடன் உரையாடுவதே ஆளுநரின் முதன்மையான நோக்கமாக உள்ளது.

ஆனால், ஆளுநரின் இந்த நடவடிக்கை வடக்கு மாகாண மக்களுக்குப் புதியதல்ல என்பதையும் ஏற்கத்தான் வேண்டும். இதற்கு முன்னரும் இவ்வாறான விரல்விட்டு எண்ணக்கூடிய நகர்வுகள் சில அதிகாரிகளாலும் - அரசியல்வாதிகளாலும் முன்னெடுக்கப்பட்டிருந்தனதான். எனினும் அந்தச் சந்திப்புகளின் போது மக்கள் முன்வைத்த விண்ணப்பங்கள் - கோரிக்கைகள் என்பன நிறைவேற்றப்பட்டனவா? சந்திப்பின் மெய்யான நோக்கம் செயல்வடிவம் பெற்று அதன் பலாபலனைக் கண்டுகொண்டதா? என்றால் 'இல்லை' என்பதே பதில். ஆதலால், ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் முன்னெடுத்துள்ள இந்தப் பயணம் அதன் முழுமையான நோக்கத்தை நிறைவேற்றினால் - இலக்கை வெற்றி கொண்டால் அது வரவேற்கப்பட வேண்டியதுதான். அதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

'கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேவையா' என்றொரு முதுமொழி தமிழில் வழக்கில் உள்ளது. ஆளுநர் தன் பயணத்தை மேற்கொள்ளாமலேயே அறிந்து வைத்திருக்கக்கூடிய -அணுகக்கூடிய பொதுப் பிரச்சினைகளாக நுண்நிதிக் கடன்களும், வட்டி 'மாபியா'களும் வடக்கில் நிறைந்தேயிருக்கின்றன. தீர்க்கப்பட முடியாத பிரச்சினைகளாக அல்லது தீர்க்கப்பட விரும்பாத பிரச்சினைகளாக இவை வடக்கில் வியாபித்திருக்கின்றன. போர் நின்றுகொன்ற தமிழர் தாயகத்தை இன்று கொஞ்சம் கொஞ்சமாகத் தின்று கொல்பவை இவைதான். பல்லாயிரம் குடும்பங்கள் இன்று வாழவே முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன என்றால் அதற்குக் கடனுதவிகள் என்ற போர்வையில் நுண்நிதி நிறுவனங்களும் வட்டி மாபியாகளும் விரித்த வலைகளே முதன்மைக் காரணம்.

உயிர்பிரியும் நிமிடங்களை எண்ணிக்கொண்டிருக்கும் விலங்குகளுக்கு மேலாக வட்டமிட்டுக் கொண்டிருக்கும் பிணம்தின்னிக் கழுகைப்போன்று, குற்றுயிராகக் கிடக்கும் தமிழர் தாயகத்தை முற்றாக வேட்டையாடக் காத்திருக்கும் நுண்நிதி நிறுவனங்கள் மற்றும் வட்டி மாபியாகளிடமிருந்து மக்களைப் பாதுகாத்தால், அதுவே ஆளுநர் இந்த மண்ணுக்குச் செய்யும் மகத்தான உதவியாக அமையும்.

இதேவேளை, நுண்நிதி நிறுவனங்கள் மீது முற்றாகப் பழியைச் சுமத்திவிட்டு நகர்ந்துவிடக்கூடிய விடயமும் இதுவல்ல என்ற புரிதல் ஆளுநரிடத்தில் ஏற்பட வேண்டும். போர் முடிவுக்கு வந்து ஒன்றரைத் தசாப்தங்கள் உருண்டோடிய போதிலும் வடக்கை மையப்படுத்திய பெரிய பொருளாதாரக் கட்டுமானங்கள் இன்னமும் ஏற்பட்டதாகவில்லை. பொருளாதாரரீதியில் செழிப்பாக இருந்த வடக்கு, இன்று தனக்கான முதலீட்டை ஈர்ப்பதில் தள்ளாடிக் கொண்டிருக்கின்றது. பொருளாதாரச் சுழற்சியை உறுதிப்படுத்தக் கூடிய வணிக நிறுவனங்களையோ அல்லது தொழிற்சாலைகளையோ அரசாங்கம் வடக்கில் ஏற்படுத்தியிருந்தால் வாழவே வழியற்ற நிலைக்கு இன்று பல்லாயிரம் குடும்பங்கள் தள்ளப்படும் நிலை வந்திருக்காது. அரசாங்கம் செயற்படுத்தத் தவறிய திட்டங்களால் ஏற்பட்ட வெற்றிடத்தை நுண்நிதி நிறுவனங்கள் இன்று பயன்படுத்தியிருக்கின்றன. இவற்றிலிருந்து மக்களை விடுவிக்கக் காத்திரமான நடவடிக்கையொன்றை ஆளுநர் முன்னெடுப்பாராயின் அவரைத் தமிழர் தாயகம் என்றும் மறவாது. இதற்கு, கிராமங்கள்தோறும் தன் பயணத்தின்போது நுண்நிதி நிறுவனங்கள் மேற்கொண்டுள்ள ஆழமான ஆக்கிரமிப்பையும் கிராமியப் பொருளாதாரத்தின் பலவீனத்தையும் ஆளுநர் புரிந்து கொள்வது அவசியம்.




## கைதிகளை சந்திக்க சலுகை

கொழும்பு, பெப். 3
சுதந்திரதினத்தை முன்னிட்டு கைதிகளைப் பார்வையிட விசேட சலுகைவழங்கப்படவுள்ளது.
சுதந்திரதினத்தன்று திறந்த இடத்தில் தடுப்புகள் இன்றி கைதிகள் தமது உறவினர்கள், நண்பர்களைச்சந்திக்கஅனுமதிக்கப்படவுள்ளனர் என்று சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

# புலிக்கொடி அச்சத்தாலேயே அதிகாரமாம்



## அமைச்சர் ஹரின் விளக்கம்

**கொழும்பு, பெப். 3**
**போர்க் காலத்தில் தேசியக்கொடிக்குப் பதிலாக எவரேனும் ஒருவர் புலிக்கொடியை ஏந்தினால் அது பிரச்சினையாகிவிடும் என்பதால்தான் தேசிய விளையாட்டு அணிகளைக் கண்காணித்து அனுமதி வழங்கும் அதிகாரம் விளையாட்டுத்துறை அமைச்சருக்கு வழங்கப்பட்டது - என்று விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
புலிகளின் பிரச்சினை இருந்தபோது இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் விளையாட்டு வீரரின் பொறுப்பைக் கண்காணிக்கத்தான் விளையாட்டுத்துறை அமைச்சர் கையொப்பம் இடும் நடைமுறை அமுலுக்கு வந்தது. ஏனெனில் ஒலிம்பிக் உட்பட சர்வதேச விளையாட்டுகளின்போது தேசியக்கொடிக்குப் பதிலாக புலிக்கொடியை தூக்கினால் அதன்மூலம் பிரச்சினை ஏற்படக்கூடும். அதனால்தான் விளையாட்டுத்துறை அமைச்சருக்கு அந்த அதிகாரம் அன்று வழங்கப்பட்டது.
இலங்கையில் விளையாட்டுச் சட்டம் பழைமையானது. அது மறுசீரமைக்கப்படும் - என்றார். (ம-44)

## உயரும் பேருந்துக் கட்டணம்



கொழும்பு, ஜன. 3
டீசல் விலை அதிகரிப்பின் காரணமாக இரு வாரங்களுக்குள் பேருந்துக் கட்டணத்தை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் எச்சரித்துள்ளது.
அதற்கமைய ஆகக் குறைந்த தொடக்க கட்டணம் 35 ரூபாவாக அறவிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ச-இ)

## கெஹலியவை கைதுசெய்க!

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை உடனடியாகக் கைது செய்யுமாறு முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா வலியுறுத்தியுள்ளார்.
மருந்துக் கொள்வனவில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் மோசடி தொடர்பில் கெஹலியவைக் கைது செய்யுமாறு வலியுறுத்தி முன்னெடுக்கும் போராட்டத்துக்கும் தனது ஆதரவை மேர்வின் வெளிப்படுத்தியுள்ளார். (ம-44)

## எரிவாயு விலை மாற்றமில்லை

கொழும்பு, பெப். 3
லிட்ரோ எரிவாயு விலை இந்த மாதம் திருத்தப்படாது என நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.
மக்கள் எதிர்கொண்டுள்ள பல்வேறு பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
இதேவேளை எரிபொருள்களின் விலை சடுதியாக அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

**நாளை**

04.02.2024
**ஞாயிற்றுக்கிழமை**
**தை – 21**
சுபநேரம் : 09.35 – 11.05
ராகுகாலம் : 05.05 – 06.35


**நாளொரு நல்வார்த்தை**

**பிரிவின் வேதனையில் மட்டுமே நாம் அன்பின் ஆழத்தைக் காணமுடியும்.**
**- ஜோர்ஜ் எலியட்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## இளையதம்பி தயாளா



தோற்றம் 04.03.1954 மறைவு 02.02.2024

இல: 114, மயிலணி வீதி,சூராவத்தை, சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை மற்றும் சூராவத்தை, சுன்னாகத்தை வசிப்பிட மாகவும் கொண்ட இளையதம்பி தயாளா இன்று (02.02.2024) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி சரஸ்வதி தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்றவர்க ளான ஆனந்தரட்ணம் நகுலாம்பிகை தம்பதிகளின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற நிர்மலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மகேந்திரா, பாலச்சந்திரா, ரதி ஆகியோரின் சகோதரனும் மனோகரி, கிருபாநிதி மற்றும் காலஞ்சென்ற தெய்வேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.02.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சூராவத்தை,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 773 7411

(CS 28033) V-1

# மரண அறிவித்தல்



மலர்வு 02 . 03 . 1946

உதிர்வு 01 . 02 . 2024

## பொன்னுத்துரை சிவதாசன்

மலேசியாவை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், அளவெட்டி-தம்மளை, வவுனியா மற்றும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திரு. பொன்னுத்துரை சிவதாசன் (முன்னாள் வீரகேசரி முகாமையாளர், வவுனியா) அவர்கள் கடந்த (01.02.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை- இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மயில்வாகனம்-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், புனிதவதி யின் அன்புக் கணவரும், Dr.குகதாசன் (UK) அவர்களின் அன்புத் தம்பியும், ரஞ்சினி, காலஞ்சென்ற குமாரவேல்ராஜா மற்றும் ஞானவேல்ராஜா, மோகனச்சந்திரன், சிவசக்தி, திலகவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், குலசிங்கம், ஆனந்தராஜா, ஸ்ரீரதி, நளினா, காலஞ்சென்ற தங்கமலர் ஆகியோரின் சகலனும், அனோஜன், நிரஞ்ஜன், மயூரன், மாலவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கார்த்திக், உமையா, குருபரன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், தனுஜா, மிர்ணாலினி, ஜானியா ஆகியோரின் அன்பு மாமனாரும், டினாரா, டிமித்திரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.02.2024) சனிக்கிழமை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் பி.ப 01:00 மணி தொடக்கம் பி.ப 07:00 வரை பார்வைக்கு வைக்கப்பட்டு, நாளை (04.02.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மு.ப. 11:00 மணியளவில் கிரிகைகள் நடைபெற்று, தொடர்ந்து மதியம் 12:00 மணியளவில் பொரளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்:
குடும்பத்தினர்.
0777111174/ 0777245358

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை திருநாவுக்கரசு (ராசு)

(முன்னாள் கொழும்பு ரெஸ்ரோரன்ற் நடத்துநர்)

தோற்றம் 16 . 04 . 1958



மறைவு 02 . 02 . 2024

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

பாடசாலை வீதி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.

தொலை பேசி இல:
075 523 5097
075 632 4813
076 302 7949

(CS 28032) S-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 03 . 1926



மறைவு 01 . 02 . 2024

## திருமதி சரஸ்வதி சீனிவாசகம்

உயரப்புலம் ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சீனிவாசகம் கடந்த (01.02.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பொன்னையா இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், நமசிவாயகம் இளையபிள்ளை தம்பதியினரின் மருமகளும், காலஞ் சென்றவர்களான கதிரவேற்பிள்ளை (Asoka Photo), தியாகராசா (Survey Draughsman), அமிர்தயோகம் மற்றும் சிவசுந்தரி, தம்பிராசா (UK) ஆகியோரின் பிரியமுள்ள சகோதரியும், சரோஜினி, ஜெகதீசன் (UK), ஜெகநாதன் (France), ரஞ்சினி ஆகியோரின் பாசமுள்ள தாயாரும், கணேசவேல் (J.P), கணேஸ்வரி (UK), சிவகாந்தி (France), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (Vesta Industries) ஆகியோரின் அன்பு மாமியாரும், உருத்திரகணேசன், ஜெயகணேசன் (மக்கள் வங்கி), காலஞ்சென்ற தேவகணேசன், ஜெயவாணி (UK), வாகினி (UK), ஜெயரதன் (UK), ஜெயந்தன் (France), ஜெயானந்தன் (France), மதுரன் (France), சதர்சன், வாகீசன், சிவதர்ஷன் (Finland) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நளை (04.02.2024) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு கரையாம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குளப்பிட்டி வீதி,
ஆனைக்கோட்டை.
021 221 3043

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 28027) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாணவர்களுக்கான ஓவியப் பாட பயிற்சிப் பட்டறை "குழந்தைகள் சுதந்திரம்" என்னும் தலைப்பில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. (ப-9)



யாழ். மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 104 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் உடுவில் பிரதேச செயலாளர் பா.ஜெயகரன், உடுவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் ஜெ.றெமின்ரன், உடுவில் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ம.இரட்ணேஸ்வரி, கிருபா சாரதி பயிற்சிப் பாடசாலை அதிபர் அ.கிருபாகரன், இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டக் குழுவினர் ஆகியோர் இணைந்து கற்றல் உபகரணங்களை வழங்கினர். (ப-20)

## விசேட மருத்துவமுகாமும் உபகரணம் வழங்கலும்

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அடம்பன், ஆண்டாங்குளம், உயிலங்குளம் ஆகிய கிராம சேவையாளர் பகுதிகளில் மருத்துவத் தேவைகளை நிறைவேற்ற முடியாத, 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களின் நலன் கருதி விசேட மருத்துவ முகாம் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு என்பன அண்மையில் இடம்பெற்றன.


மெதடிஸ்த திருச்சபை டெவ்லிங் நிறுவனம் நடத்திய இந்த நிகழ்வில், மன்னார் மாவட்ட செயலர் கனகேஸ்வரன், மன்னார் மாவட்ட முன்னாள் செயலர் ஸ்ரான்லி டிமேல், மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் வினோதன், டெவ்லிங் நிறுவனத்தின் பிரதான இணைப்பாளர் அருட்பணி. ஜீ. அன்ரனி சதீஸ், பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரிகள், அருட்தந்தையர்கள், மெதடிஸ்த திருச்சபை டெவ்லிங் நிறுவன மாவட்ட இணைப்பாளர், திட்ட இணைப்பாளர், மருத்துவர்கள், தாதியர்கள், இயன் மருத்துவர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் உட்பட 3 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 150 க்கு மேற்பட்ட முதியவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-213)

சாவகச்சேரி நகர், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சங்க அங்கத்தவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளை அண்மையில் நடத்தினர் (ப-9)





ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பளை, இந்திராபுரம் கிராமத்தில் குடிதண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இதனால் கிராமத்தில் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை நீங்கும் என கிராம மக்கள் தெரிவித்தனர். இதேவேளை பிரதேசத்தில் குடிதண்ணீர் சுத்திகரிப்புத் திட்டத்தின் கீழ் குடிதண்ணீர் பற்றாக்குறை காணப்படும் எட்டு கிராமஅலுவலர் பிரிவுகளில் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன எனவும் தெரிவித்தனர். (ய-9)





யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்டு தற்போது கிளிநொச்சியில் புலம்பெயர்ந்து வாழும் நிவேதா உதயராஜன் எழுதிய "மனமும் இடம்பெயரும்" என்ற சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடு அண்மையில் கிளிநொச்சி கல்வி பண்பாட்டு அபிவிருத்தி நிறுவன மண்டபத்தில் நடைபெற்றது. கிளிநொச்சி, சாந்தபுரம் கலைமகள் வித்தியாலய அதிபர் பெ. கணேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கவிஞர்கள், மாவட்ட [illegible], மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ப-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலபண்டிதர் சான்றிதழ்; கற்கைநெறி தொடக்கவிழா

யாழ்ப்பாணம், பெப்.3

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்துடன் இணைந்து, அதன் திறந்த மற்றும் நிலையம் ஊடாக நடத்தும், 2023, 2024 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ் பாலபண்டிதர் தலைமைச் சான்றிதழ் கற்கை நெறியின்தொடக்க விழா யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இன்று சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் நூலக பிரதி நூலகர் மற்றும் தமிழியல் நூலக செயற்றிட்ட இணைப்பாளர் கலாநிதி மைதிலி விசாகரூபன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சான்றிதழ் மற்றும் டிப்ளோமா கற்கைகள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ஏ.சரவணபவன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கப் பரீட்சைச் செயலாளர் பண்டிதர் ம.ந.கடம் பேசுவரன், யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராசா எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ப-159)


## பெயர்மாற்றம்

செல்வபுரம் முல்லைத்தீவில் வசிக்கும் **குமாரசாமி புனிதராஜ்** ஆகிய நான் இன்று தொடக்கம் எனது பெயரை **குமாரசாமி புனிதராசா** என மாற்றியுள்ளேன் என்பதனை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(cs53811) (N.1) **குமாரசாமி புனிதராசா**

## செவிப்புலன் கருவிகள் விற்பனைக்கு




செவிப்புலன் குறைபாட்டினால் அவதிப்படுகின்றீர்களா? கவலை வேண்டாம் மிகக்குறைந்த தொகையாக ரூ . 11999/- மட்டுமே செலுத்தி செவிப்புலன் கருவி ஒன்றினை உங்களுடயதாக்கிக்கொள்ளுங்கள் . உங்கள் வீட்டுக்கே வந்து பரிசோதித்து வழங்குகின்றோம்.

**விரையுங்கள் குறைந்த கையிருப்புகள் மாத்திரமே**

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

**077 434 6245**


## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 31 |  | 01 |
| 12 | | 02 |
| 1942 | | 2024 |

### கந்தசாமித்துரை வள்ளிநாயகி (கிண்ணியம்மா)

வல்வெட்டித்துறை வேம்படியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமித்துரை வள்ளிநாயகி அவர்கள் நேற்றுமுன்தினம் (01.02.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் பர்வதபத்தினி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமித்துரையின் பாசமிகு மனைவியும், பாலேந்திரன் (அருமை), காலஞ்சென்றவர்களான சிறீகரன் (முரளி), ரவீந்திரன் (கிண்ணி) மற்றும் ஈஸ்வரராசா (பிரதிப் பிரதம செயலாளர், பொறியியல் சேவை வடக்கு. மாகாணம்), துரைலிங்கம் (துட்டான்), வளர்மதி (ராணி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், புவனேஸ்வரி, இளம்பிறை, பானுமதி, ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், நித்தியானந்தவேல், காலஞ்சென்ற மகாலெட்சுமி மற்றும் பாலசுப்பிரமணியம், சதானந்தவேல், இராஜலெட்சுமி, சண்முகநாதன் (குட்டிப்பாலி), நவலட்சுமி ஆகியோரின் சகோதரியும், வல்லிபுரம் மாஸ்ரரின் மைத்துனியும், சிறீகரன், சுதாகரன், வானதி, வாகீசன், ரவிகரன், விவேகன், கலைக்குமரன், கலைக்கதிர் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.02.2024) ஞாயிற்றுக்கிழமை அவரது வேம்படி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

அருமை (மகன் - 077 841 4450)
ஈசன் (மகன் - 071 321 6996)
துட்டான் (மகன் - 0041 7822 74577)

(IN26589) N-1

## மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 05 |  | 29 |
| 08 | | 01 |
| 1948 | | 2024 |

### நாகேஸ்வரி விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவம் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேஸ்வரி விக்னேஸ்வரன் கடந்த (29.01.2024) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் விக்னேஸ்வரன் அவர்களின் அன்பு மனைவியும், சிவரூபன், ஹறிகரரூபன், கஜரூபன், சோபனா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (05.02.2024) திங்கட்கிழமை மதியம் 1.00 மணியளவில் Epinay's Funeral House, 95 rue Marcel Smabal 83340 Epinay Villetaneuse என்னும் இடத்தில் நடைபெறும்.

இவ்றிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**கோவில் வீதி,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

**Vigneswaran 0094773151245**
Sivaruban - +1(416) 726-3826
Harikararuban - +49 176 80257644
Kajaruban - +33 695 203661
Shobana - +1 (438) 878-0541

(CS 53816) A-1

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 29 |  | 29 |
| 04 | | 01 |
| 1941 | | 2024 |

### நாகலிங்கம் பாலகுரு

புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் தாவடி பாடசாலை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் பாலகுரு கடந்த (29.01.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகம் - பூரணம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், இராயேஸ்வரியின் கணவரும், உமா, பவணந்தன், உஷா, ஊர்மிளா, சர்மிளா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், தேவராஜா, பாலேந்திரன், ரவிகாந்தன், சுதேஸ்வரன், தயாலினி ஆகியோரின் அன்பு மாமனாரும், நிதுரா, அக்ஷயா, அபினா, கௌரிகா, விதுசன், கிஷேர், சாயிகீஸ், சாயீத்தியா, அகரன் ஆகியோரின் அன்புப் பேரனும், மித்திஷா, பிரதிஷா, வைசாந் ஆகியோரின் பூட்டனும் காலஞ்சென்றவர்களான சிவஞானம், வடிவேல் மற்றும் இரஞ்சிதம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற முத்துலிங்கம் மற்றும் கமலாதேவி, நாகராசா காலஞ்சென்றவர்களான இராசலிங்கம், நடேசலிங்கம், அன்னலிங்கம், சரஸ்வதி மற்றும் கமலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.02.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்றிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பாடசாலை வீதி, தாவடி தெற்கு,**
**கொக்குவில்.**
**[illegible], 075 805 8003**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 28020) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மின்தடை

யாழ்ப்பாணம், பெப்.3

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநி யோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக மின்சாரம் தடைப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். மாவட்டத்தில்** மக்கள் வங்கி ஸ்டான்லி வீதி, ராஜா தியேட்டர், கஜமுகன் வன்பொருள் வளாகம், லிங்கம் கிறீம் ஹவுஸ், என்.எஸ்.ஆர் வளாகம், மணிக்கூட்டுக் கோபுர வீதி ஸ்டான்லி வீதி சந்தி, பழைய தபால் அலுவலக ஒழுங்கை ஸ்ரான்லி வீதி, றொசல் கட்டடம், வெலிங்டன், வின்சர் ஆகிய இடங்களிலும் **வவுனியா மாவட்டத்தில்** அவறந்துலாவா, நவகம்மானே, பாவற்குளம், பழையனூர், பெரிய உளுக்குளம் தீவரகம், இராஜேந்திர குளம், சூடுவெந்தபுலவு கோபுரம், சூடுவெந்தபுலவு, துடாரிக் குளம், ட்ராக் 7 பாவற்குளம், உளுக்குளம், உளுக்குளம் எல்.பி. குடியிருப்பு ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப் பட்டிருக்கும். (ப)

## அனலைதீவு அருணோதயாவின் பொன்விழா

அனலைதீவு, பெப்.3

அனலைதீவு அருணோதயா சனசமூக நிலையத்தின் ஐம்பதாவது ஆண்டு பொன்விழா மற்றும் கலையரங்கத் திறப்பு விழா என்பன இன்று சனிக்கிழமை மு.ப. 9 மணிக்கு நடைபெறவுள்ளன. நிலையத் தலைவர் இ.அனோராஜ் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். …தனா மருத்துவமனைப் பணி… மருத்துவர் த.சத்தியமூர்த்தி கலந்துகொள்வார்.

நிகழ்வில் முத்திரை வெளியீடு, அருணோதயம் நூல் வெளியீடு மற்றும் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கல் என்பன இடம் பெறும். (ப-9)


## திருச்சொரூப பவனி நாளை

சாவகச்சேரி, பெப். 3

மட்டுவில் வடக்கு அன்னை லூர்த்து மாதா தேவாலயத்தின் வருடாந்த உற்சவம் ஆலயத்தின் பங்குத்தந்தை ஞானரூபன் தலைமையில் கடந்த 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. ஆறு தினங்கள் நடைபெறவுள்ள உற்சவத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் நற்கருணைப் பூசையும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருப்பலிப் பூசையுடன் திருச்சொரூப பவனியும் நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-131)



சாவகச்சேரி பிரதேசசபைக்குச் சொந்தமான ஜே/322, அல்லாரைப் பகுதியில் நீண்ட காலமாக இயங்கி வந்த ஐங்கரன் முன்பள்ளி கடந்த சில ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. நவீன முறையிலான கற்பித்தல் நுட்பங்களுடன் மிகச்சிறந்த கிராமிய இயற்கைச் சூழலில் அமைந்துள்ள இந்த முன்பள்ளிக் கட்டடம் விருந்தினர்களால் நாடா வெட்டித் திறந்து வைக்கப்பட்டது. வரவேற்பு நடனம், கலை நிகழ்வுகள், ஏடு தொடக்குதல் மழலைகளுக்குப் பரிசில் வழங்கல் என்பனவும் இடம்பெற்றன. (ப-159)



காங்கேசன்துறை துறைமுகத்தை நவீன வசதிகளுடன் அபிவிருத்தி செய்வது தொடர்பான விசேட கூட்டம் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது. கூட்டத்தில் யாழ். மாவட்ட மேலதிக செயலர் க.ஸ்ரீமோகனன், தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் திருமதி சுதீஸ்னர் சிவசங்கா, சம்பந்தப்பட்ட அமைச்சுகள் [illegible] திணைக்களங்களின் உயரதி[illegible] எனப் பலரும் கலந்து [illegible]டனர். (ப-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுப்பயணங்கள் நாட்டுக்கு அவசியம்

## உருட்டுகிறார் இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, பெப். 3

இலங்கை தனிமைப்படுத்தப்பட்ட தீவாக இருக்க முடியாது. நாட்டை அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்ல வேண்டுமாயின் வெளிநாட்டுத் தொடர்பு களைப் பலப்படுத்திக்கொள்வதும் புதிய வெளிநாட்டு உறவு களை ஏற்படுத்திக்கொள்வதும் அவசியம்.

-இவ்வாறு ஜனாதிபதியின் வெளிநாட்டு சுற்றுப் பயணங்கள்தொடர்பில்சிலரால்முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விளக்கமளிக்கையில் வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய தெரிவித்தார்.

"ஜனாதிபதியின் வெளிநாட்டுச் சுற்றுப்பயணங்கள் தொடர்பில் முன்வைக்கப்படும் விமர்சனங்கள் ஆதாரமற்றவை. இந்தச் சுற்றுப்பயணங்களால் முத லீட்டாளர்களுடன் இணைந்து அபிவிருத்திச் செயற் பாடுகளை வலுப்படுத்துவதற்கான இயலுமை கிடைக் கும். அதேபோல் அணிசேராக் கொள்கையை மேலும் உறுதிபடுத்துவதாக வும் அமையும்" என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ச-இ)

# கூட்டுறவுச் சங்கங்களூடாக நெல் கொள்வனவு செய்க

## விவசாயிகள் கோரிக்கை

கிளிநொச்சி, பெப். 3

போர்க்காலத்தில் கைகொடுத்தமை போன்று பலநோக்குக் கூட்டுறவுச் சங் கங்கள் நெல்கொள்வனவில் ஈடுபட முன்வரவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

"கடந்த போர்ச்சூழல் காலத்தில் விவசாயி களிடமிருந்து கூடுதலான நெல்லை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களே கொள்வனவு செய்தன. இதற்கு மாவட்டச் செயலகம் நிதியைப் பெற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி வந் தது.

தற்போது பலநோக்குக் கூட்டுறவுச் சங் கங்கள் நெல் கொள்வனவில் ஈடுபடாத தன் காரணமாகவே உரிய விலையை நெல்லுக்குப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இடைத்தரகர் களின் உதவியுடன் தனியார் மிகக் குறைந்த விலையிலேயே நெல்லைக் கொள்வனவு செய்கின்றனர்" என்றும் விவசாயிகள் சுட்டிக்காட்டினர். (ச-13)

# பளைப் பிரதேசத்தின் அபிவிருத்திக் கூட்டம்

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் பன்முகப் படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங் களைத் தெரிவு செய்வதற்கான பிரதேச மட்ட கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடற்றொழில் அமைச்சரும் மாவட்ட ஒருங் கிணைப்புக் குழுத் தலைவருமான டக் ளஸ் தேவானந்தா தலைமையில் நடை பெற்றது.

உதவிப் பிரதேச செயலாளர், பிரதித் திட்டமிடல் பணிப் பாளர், மாவட்டச் செயலகத் திட்டமிடல் பணிப் பாளர், ஏனைய திணைக்களங்களின் தலைவர்கள், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைப்பாளர் மற்றும் அலுவ லர்கள், கிராம அலுவலர்கள், பொரு ளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் கள், சமூக மட்ட அமைப்பு களின் பிரதி நிதிகள், அலுவலக உத்தியோகத்தர் கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ப-9)

# நுளம்புவலை வழங்கிவைப்பு

யாழ்ப்பாணம், பொம்மைவெளி கிரா மத்தில் வசிக்கும் 26 குடும்பங்களுக்கு 'ப்ரத்யங்கிரா' அறக் கட்டளையின் சேவை யில் அவுஸ்திரேலி யாவில் வசிக்கும் ஒருவரின் நிதி அனு சரணையில் கடந்த திங்கட்கிழமை நுளம்பு வலைகள் வழங்கி வைக்கப்பட்டன. (ப-63)

**வேயப்பட்ட தென்னோலை கிடுகுகள் மற்றும் உழவு இயந்திரங்களினை (tractor) வாடகைக்கு வழங்குபவர்களுக்கான கூறுவிலை**

ஆனையிறவு உப்பளத்துக்கு மாதாந்தம் 12000 கிடுகுகள் வீதம் ஆண்டுக்கு 80,000 வேயப்பட்ட தென்னோலைக் கிடுகுகளும் உப்பு ஏற்றுவதற்காக வாடகைக்கு உழவு இயந்திரங்களும் சேவை வழங்குநர்களிடமிருந்து மூடப்பட்ட கூறுவிலை கோரப்படுகின்றது. தகைமையுடையவர்கள் விண்ணப்பப் படிவத்தை ரூ500/= செலுத்தி 10.02.2024ம் திகதி 01.30PM க்கு முன்னர் தனித்தனியான விண்ணப்பப் படிவத்தினூடாக விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரர்கள் கூறுவிலை திறக்கப்படும் நேரத்தில் நேரடியாகப் பங்குபற்ற முடியும். விண்ணப்பப் படிவத்தையும் மேலதிக தகவல்களையும் தேசிய உப்பு நிறுவனம், A9 வீதி, ஆனையிறவு, கிளிநொச்சி என்ற முகவரியில் நேரடியாகவும், 0213204556, 0742023384 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவும் nationalepass@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**முகாமையாளர்,
தேசிய உப்பு நிறுவனம்,
ஆனையிறவு,
கிளிநொச்சி.**

**பணிப்பெண் தேவை**

வீட்டில் தங்கி இருந்து வயோதிப மாதுவை பராமரிக்கவும், வீட்டு வேலைகள் செய்யவும் பெண் பணியாளர் தேவை.

T.P:076 416 9292

**நல்லூர்க் கந்தன் திருமண சேவை**

ஆண்/பெண் (V) ஆண்/பெண் (K) ஆண்/பெண் (N) ஆண்/பெண் (P)


பெண் (S) மணமகள் தேவை.

உத்தியோகம், உத்தியோகம் இல்லாதது, உள்நாடு, வெளிநாடு அனைத்து மணமக்களுக்கும், ஆண், பெண் எல்லா இனத்தவர்களுக்கும், விரைவாக மணமகள்கள், மணமகன்கள், டிவோஸ் மணமகன், மணமகள்களும் உடனடியாக இருப்பதால் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: வீ.ஜெயந்தி 077 973 3183

## 31ஆம் நாள் நினைவு தினம்

தோற்றம்:25.01.1934 மறைவு:03.01.2024



**செல்வரட்ணம் ஜோஜ் அரியரட்ணம்**
**(முன்னாள் உதவி முகாமையாளர்- Singer Company) கேகாலை சுன்னாகம்.**

"கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார்"
கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம் (யோபு-1:21)

அன்புடனும் பண்புடனும் எம்மை வளர்த்து
ஆக்கமும் ஊக்கமும் தந்து
அவணியில் சீரும் சிறப்புடனும் வாழ
வழியாட்டிய எம் உறவே ! நாமும் ஒரு நாள்
உம்மை முகமுகமாய் சந்திப்போம்
என்ற நிச்சயத்துடன் உமது வாழ்வுக்காக
ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறோம்.

எமது தந்தையின் இறுதிச்சடங்கில் பங்குபற்றியவர்களுக்கும் உதவிகள் செய்தவர்களுக்கும், மலர்வளையங்கள் வைத்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவிக்கிறோம். இவருடைய வாழ்வுக்கு நன்றி செலுத்தும் வழிபாடு இன்று (03.02.2024) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு இடம்பெறும்.


**நடைபெறும் இடம்: (ராஜா கிறீம் ஹவுஸ் மண்டபம்)**

**குடும்பத்தினர்**
**077 922 3849**

(CR 41714) A-1

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 | 02 |
| 08 | 02 |
| 1982 | 2024 |



**சண்முகலிங்கம் மயூரன்**

சண்முகலிங்கம் மயூரன் அவர்கள் நேற்று (02.02.2024) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சண்முகலிங்கம் (ஓய்வு பெற்ற யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர்) மகராணி தம்பதிகளின் அன்பு மகனும், கோகுலன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், APC காரைநகர்) அவர்களுடைய சகோதரனும், உமைப்பிரியாவின் அன்பு மைத்துனரும், மோகனசாயின் பாசமிகு பெரியப்பாவும், காலஞ்சென்ற உமாபதி, பவானி, சியாமளா மற்றும் கனகசபாபதி (குரு) ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான துரைராசா, கனகேஸ்வரி, இராசேந்திரம், புவிலட்சுமி ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.02.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 09.30 மணியளவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**கோகுலன் (தம்பி)**
**077 899 7285**

(CS 28036) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கெஹலிய கைது...

மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றின் உத்தரவுக்கு அமைவாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் (சி.ஐ.டி.) வாக்குமூலம் வழங்குவதற்காக அவர் நேற்று முன்னிலையான நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

தரமற்ற இம்யுனோகுலோபுலின் மருந்துகளைக் கொள்வனவு செய்து மருத்துவ விநியோகப் பிரிவுக்கு வழங்கிய சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். விசாரணையின்போது சுமார் 130 மில்லியன் ரூபா நிதி மோசடி இடம்பெற்றுள்ளமை தெரியவந்தது.

முன்னதான நீதிமன்ற உத்தரவுக்களுக்கமைய இந்த மருந்துகளை உற்பத்தி செய்து, விநியோகத்திருந்த தனியார் நிறுவன உரிமையாளர், மருத்துவ விநியோகப் பிரிவின் பணிப்பாளர் கபில விக்ரமநாயக்க, உதவிப் பணிப்பாளர் தேவசாந்த சொலமன், கணக்காய்வாளர் நேரான் தனஞ்சய, களஞ்சியக் கட்டுப்பட்டாளர் சுஜித்குமார, சுகாதார அமைச்சின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஹேரத்குமார ஆகியோர் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த விடயம் தொடர்பில் கெஹலிய ரம்புக்வெல மற்றும் சுகாதார அமைச்சின் முன்னாள் மேலதிக செயலர் மருத்துவர் சமன் ரத்நாயக்கவிடம் வாக்குமூலங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கடந்த புதன்கிழமை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

அதற்கு அமைவாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் கெஹலிய ரம்புக்வெல வாக்குமூலம் வழங்குவதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில்

முன்னிலையாகவில்லை. இதனால் சுகாதார அமைச்சின் முன்னாள் மேலதிக செயலர் சமன் ரத்நாயக்கவிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் 10 மணி நேரம் வாக்குமூலம் பதிவு செய்திருந்தது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் மாளிகாந்த நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போது, கெஹலிய ரம்புக்வெலவுக்கு வெளிநாட்டு பயணத் தடை விதிக்கப்பட்டது.

அத்துடன் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்குமாறும் பணிக்கப்பட்டிருந்தது.

அதற்கு அமைவாக வாக்குமூலம் வழங்கச் சென்ற அவர் விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ஒ-44)

## வீதியைக்...

அண்மித்துள்ள பாதுகாப்பான புகையிரதக் கடவையில் நேற்றுமாலை 5 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

விநாயகர்புரத்தைச் சேர்ந்த மதன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வீதியின் குறுக்கே இடப்பட்டிருந்த தடைக்குள்ளால் நுழைந்து சென்றவர், ரயில் வரும் திசையைக் கவனிக்காமல், எதிர்த் திசையை மட்டும் பார்த்து விட்டு வீதியைக் கடக்க முற்பட்டுள்ளார். அப்போதே, அவரை ரயில் மோதித்தள்ளியது. அந்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். (அ-ஒ-9)

## யாழ்...

காக 332 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அனைத்துக் கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் நிதி சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படும் - இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

சங்கானைப் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மேற்கண்டவாறு கூறினார்.

"அரசால் ஒதுக்கப்பட்டுள்ள நிதி தொடர்பில் நான் தெரிவித்த கருத்துக்கு சில ஊடகங்கள் தங்கள் கருத்துகளையும் உள்ளீர்த்து வெளியிட்டுள்ளார்கள்" என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-ஒ-125)

## நடிகர்...

யின் பெயரை நேற்று அறிவித்து அரசியலுக்குள் நுழைந்துள்ள நிலையிலேயே, நாமல் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

## குடிவரவு...

85ஆம் இலக்கத்துக்குரியவர் வெளியே நிற்க, 160ஆம் இலக்கத்துக்குரியவரை உள்ளே அழைத்த பின்னர், கடவுச் சீட்டு இன்றைய தினம் (நேற்று) வழங்கப்படாது என்று திணைக்கள அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டது. பிறிதொரு தினத்தில் வருமாறு அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால் பொதுமக்கள் குழப்பமடைந்து திணைக்களத்தை முற்றுகையிட்டு எதிர்ப்பு வெளியிட்டனர்.

பொலிஸார் அங்கு வரவழைக்கப்பட்டனர். குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தின் பணிப்பாளருடன் கலந்துரையாடினர். நேற்றையதினம் மேலதிகமாக பொதுமக்களை உள்ளெடுக்க முடியாது என்றும் பிறிதொரு தினத்தில் முன்னுரிமை அடிப்படையில் வெளியில் காத்திருந்தவர்களுக்கு இலக்கம் வழங்குவதாகவும் தெரிவித்ததையடுத்தே குழப்பம் தணிந்தது. (அ-ஒ-18)

## 'ஹ-ஏஸ்'...

இந்தச் சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் முகமாலை தேவாலயத்துக்கு முன்பாக இடம்பெற்றது. வாகனத்தில் எட்டுப் பேர் பயணித்தபோதிலும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. (அ-ஒ-9)

## தரம் 6...

https://moe.gov.lk/wpcontent/uploads/2024/02/02/2023_Tamil_Cutoff.pdf என்ற இணையத்தளத்துக்குள் பிரவேசித்து வெட்டுப்புள்ளிகளைப் பார்வையிட முடியும். (அ-ஒ-இ)


## ரியூசன்களில்...

கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டபோதும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதைப் பொருட்டாக எடுத்துக்கொள்ளாமல் கடந்து சென்றார்.

சங்கானை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன்போதே மேற்படி விடயம் நடைபெற்றது.

தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பில் யாழ். மாவட்டச் செயலரின் உத்தரவை நடைமுறைப்படுத்துவது பிரதேச செயலகமா, பிரதேச சபையா என்ற குழப்பம் காணப்படுவதால் அதைத் தீர்த்து வைக்கவேண்டும் என்ற கோரிக்கை அமைச்சரிடம் பொதுமகனால் முன்வைக்கப்பட்டது. அதற்கே அமைச்சர் பதிலளிக்காமல், அடுத்த விடயத்துக்குச் சென்றார். (அ-ஒ-125)

# மரண அறிவித்தல்




## மயில்வாகனம் குமாரவேல்ராசா

**(ஓய்வுபெற்ற கணக்காளர்)**

யாழ்ப்பாணம் செட்டியகுறிச்சி பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், குருக்கள் வீதி, மீசாலை கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் குமாரவேல்ராசா (ஓய்வுபெற்ற கணக்காளர்) அவர்கள் கடந்த (01.02.2024) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் சரஸ்வதி தம்பதியினரின் சிரேஸ்ட புத்திரரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் ஈசுவரி தம்பதியினரின் அன்பு மருமகனும், ஸ்ரீரதியின் அன்புக் கணவரும், கௌதமி, மதுசுதன், விபுலன், கபிலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீகணன், கோபிதா ஆகியோரின் அன்பு மாமனும், ஞானவேல்ராசா, புனிதவதி, சிவசக்தி, மோகனச் சந்திரன், திலகவதி ஆகியோரின் அன்பு அண்ணனும், நளினா, காலஞ்சென்ற சிவதாசன், தங்கமலர், மற்றும் குலசிங்கம், ஆனந்தராசா, ஸ்ரீரங்கன், ஸ்ரீரஞ்சன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவகலை, மதிவதனி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் குருக்கள் வீதி, மீசாலை கிழக்கில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (04.02. 2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று அவரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் .

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குருக்கள் வீதி**
**மீசாலை கிழக்கு.**
**0774121777 / 0775997377**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 28029) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னந்தோட்ட உரிமையாளர்களுக்கு



இந்தியாவிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட 3HP மோட்டரில் இயங்கக் கூடிய தேங்காய் உரிக்கும் இயந்திரம் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். மணித்தியாலத்திற்கு 800-1000 வரையான தேங்காய்களை குடும்பி உடனும் குடும்பி இல்லாமலும் உரிக்கக் கூடியது.

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"

**ஆர்க். என். கம்பனி**

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். -021 222 4021
A-9 வீதி, எழுதுமட்டுவாள். -070 101 3571
A-9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். -021 228 2020

**Hotline: 071 535 7799/ 071 973 9917**

## காணி விற்பனைக்கு

புத்தூர் - மட்டுவில் பிரதான வீதியில் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

1 பரப்பின் விலை 3லட்சம்.
விலை பேசித்தீர்மானிக்கலாம்.

**பார்வையிடும் நேரம்:**
காலை: 8.30 - மாலை 6.00

தொடர்புகளுக்கு:
**076 659 0583**
**076 109 8504**

## NEW SCIENCE HALL- JAFFNA

**PHYSICS**
**Paper Classes**
R.Rakulan B.Sc

**2024-A/L**
ஆரம்பம்: 11.02.2024
(ஞாயிறு) 5.30PM - 7.00 PM
வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு

**English Medium**
**2025-A/L**
Starts from:05.02.2024-Monday

**Newton's Law**
Mon, Tues - 5.30 PM - 7.00 PM

CR 41713

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம்-கைதடி A-9 வீதி முகப்புடன் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**
- நல்ல சூழல் நன்னீரூற்று
- கைதடி சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரம்.
- வடமாகாண சபை 300மீற்றர்
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

**077 129 4999**
**076 788 0591**

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் சாவகச்சேரி. நுணாவில். வைரவர் கோயில் சந்தி அருகாமை A-9 வீதி இரண்டாம் காணி விற்பனைக்குண்டு.
- நிலப்பரப்பு-ஒரு பரப்பின் விலை பத்து லட்சம் (10 00 000/=) ரூபாய்.
- தரகர் தேவை இல்லை
- பார்வை நேரம் காலை 8.00 மணி தொடக்கம் 6.00 மணி வரை

தொடர்பு: **071 173 3911**
**076 853 5022**

## சாரதி தேவை

தனியார் நிறுவனத்தில் அசோக் லேலண்ட் ரக பஸ் ஒன்றிற்கு அனுபவம் வாய்ந்த கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர் தேவை.

தொடர்பு: **076 810 2805**

## காணி விற்பனைக்கு

இராச வீதி பிரதான முகப்புடன் 03 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

தொடர்புகளுக்கு:- ஜெயம்
**077 814 7389,**
**077 986 5457.**

## விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி

இல. 63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

**A/L 2023**
**செயன்முறை வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகள்**

- பொறியியல் தொழினுட்பம்
- உயிர்முறைமைகள் தொழினுட்பம்

- ஆரம்பம் - 05.02.2024
- நேரம் - காலை 9.00 am

- பரீட்சையில் எதிர்பார்க்கப்படும் செய்முறை வினாக்களைக் கொண்ட பரீட்சைகள் நடத்தப்பட்டு மதிப்பீட்டுப் புள்ளிகள் வழங்கப் படும்.
- ஒவ்வொரு மாணவர்களுக்கும் தனித்தனியாக அனைத்து செயன்முறைகளும் பயிற்றுவிக்கப்படும்.
- செயன்முறைகள் அனைத்தும் 08 வருட பரீட்சை மதிப்பீட்டு அனுபவமுடைய ஆசிரியர்களால் மாத்திரமே நடைபெறும்.

தொடர்பு: **077 248 7774 / 076 552 9093**

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
30 . 10 . 1954



ஆண்டவன் மடியில்
01 . 02 . 2024

**திருமதி நாகேஸ்வரி தர்மலிங்கம்**

ஊரெழு கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி தர்மலிங்கம் அவர்கள் கடந்த (01.02.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் அன்னம்மா தம்பதிகளின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் நாகம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், நளாயினி (London), பிரசன்னா, திருமாறன் (France) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுயிவன், கஜநிதி, சைனிகா ஆகியோரின் பாசமிகு மாமியும், அக்ஷிகா, அபினாஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற ஜெகநாதலிங்கம், கணேசலிங்கம், காலஞ்சென்ற சுந்தரலிங்கம், புவனேஸ்வரி, சிவகுமார் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், ஞானசக்தி, சரஸ்வதி, தங்கரத்தினம், அன்னலக்சுமி, மகாலிங்கம் மற்றும் பராசக்தி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.02.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊரெழு பொக்கணை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**உடையார் ஒழுங்கை**
**ஊரெழு கிழக்கு**
**ஊரெழு.**

(CS 29342) V-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**021 224 1906**

## வேலைவாய்ப்பு

யாழ் நகரை அண்மித்த பிரபல தனியார் கம்பனியில் வேலைவாய்ப்பு GCE A/L படித்தவர்களின் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தொடர்பு: **077 459 9649**

## பணியாளர்கள் தேவை

மன்னார் இலுப்பைக் கடவையில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு
1. றொட்டி, கொத்துறொட்டி, றைஸ் போடக்கூடியவர்.
2. காசாளர் (கணினி அறிவு உள்ளவர்)

**உடனடியாக தேவை.**

தொடர்பு: **074 386 3050**

## வாடகைக்கு

மில் (கிறைன்டிங் மில்) வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: **077 5695 159**

## பணிப் பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து குழந்தையை பராமரிக்கக் கூடிய வீட்டு வேலை தெரிந்த பணிப்பெண் தேவை.
இடம்: யாழ். நகர் & கொழும்பு.

**T.P: 077 9672 643**

## வீடு மற்றும் கடை கீழ் தளம் வாடகைக்கு உள்ளது

ஆனைப்பந்தி சந்திக்கு அருகில் நிறுவனங்களுக்கு உகந்த வகையில் இரண்டு மாடி வீடும் மற்றும் கடை ஒன்றும் வாடகைக்கு உள்ளது.

தொடர்பு: **071 73 500 67**

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம்-நல்லூர் நாவலர் வீதியில் 6 பரப்பு காணியுடன் வீடு குறைந்த விலையில் விற்பனைக்கு மற்றும் வெள்ளவத்தை, பருத்தித்துறை சாவகச்சேரியில், காணிகள், வீடுகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: **077 968 1340**

## கணிதம், வரலாறு

**09 - O/L, A/L வகுப்புகள்**

தனியாகவோ, குழுவாகவோ வீடுகளுக்குவந்து கற்பிக்கப்படும். தேசிய ரீதியாக சிறந்த பெறுபேறுக்காக வழிகாட்டும் உங்கள் ஆசான்.
**தனியார் கல்வி நிறுவனங்களும் தொடர்பு கொள்ளலாம்.**

**T.P.: 077 482 5438**

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணம், சாவகச்சேரி பகுதியில் நல்ல சுற்றாடலில் வீடு வாடகைக்குத் தேவை. பிரதான வீதியில் விரும்பத் தக்கது.

தொடர்பு: **077 284 7850**

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு

இருபாலையில் அமைந்துள்ள வெட்டுக்கிணறு மற்றும் வீட்டுடன் கூடிய 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வாகன தரிப்பிட வசதியும் உண்டு.

(cs.53824) (N-1)

தொடர்பு: 074 239 5790
0044 798 342 9645
077 933 4736

## காணி விற்பனைக்குண்டு

நுணாவில் A9 வீதியில் அமைந்துள்ள 12 1/2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. நிறுவனங்கள், அலுவலகங்கள் கட்டுவதற்கு உகந்த இடம்.

(cs.53823) (N-1)

தொடர்பு: 074 239 5790
0044 798 342 9645
077 933 4736



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.